# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 12 செவ்வாய்க்கிழமை (28-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 207


## கடலில் மூழ்கிய படகில் பயணம் செய்த ஈழ அகதிகளின் பெயர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

மன்னாரில் இருந்து தமிழகத்துக்குச் சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் 44 க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் உயிரிழந்தது தெரிந்ததே.

இராமேஸ்வரம் கடலில் மூழ்கிய அந்தப் படகில் பயணம் செய்தவர்களின் பெயர் விவரங்களை மன்னார் இலுப்பைக்கடவை கடற்றொழிலாளர் சங்கம் வெளியிட்டிருக்கிறது.

இந்த விபத்தில் சிக்கியோரில் காண்டீபன் (வயது 13), வேலாயுதம் (வயது 48) ஆகிய இருவரும் நீந்திக் கரை சேர்ந்ததாக இந்திய தொலைக்காட்சி ஒன்று நேற்றிரவு தெரிவித்தது.

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## 44 ஈழ அகதிகள் சாவு:
## தமிழகத் தலைவர்கள் இரங்கல் தெரிவிப்பு!

சென்னை, ஜூலை 28

ஈழ அகதிகள் 44 பேர் இராமேஸ்வரத்துக்கு அருகில் கடலில் மூழ்கிப் பலியான சம்பவம் தொடர்பாக இந்திய அரசியல் தலைவர்கள் பலர் தமது அனுதாபங்களையும், ஆறுதல்களையும் வெளியிட்டுள்ளனர்.

பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவர் ஆர். நல்லகண்ணு, அ.தி.மு.க. சார்பில் வி. சத்தியமூர்த்தி, தி. மு. க. சார்பில் ரி. ஆர். பாலு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி ஆகியோர் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

"இலங்கையில் இருந்து பல இன்னல்களுக்கு மத்தியில் தமிழகம் நோக்கி வந்த அகதிகளை இயற்கை கூட இன்னல்களுக்கு உட்படுத்தி விட்டது. இவர்களின் இழப்பால் துயருறும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்." — என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (உ-9)

# தீவிர பாதுகாப்பின் மத்தியில் சார்க் நாளை முதல் ஆரம்பம்

## தலைவர்கள் இன்று கொழும்பு வருவர்

கொழும்பு, ஜூலை 28

10 ஆவது 'சார்க்' உச்சிமாநாடு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் நாளை கொழும்பில் ஆரம்பமாகின்றது.

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஆறு நாடுகளின் தலைவர்கள் இன்று கொழும்பை வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநாட்டை முன்னிட்டு தலைநகரில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாநாடு நடைபெறும் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபம் மற்றும் 'சார்க்' நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள் தங்கவுள்ள ஹோட்டேல்கள் மற்றும் அவர்கள் விஜயம் செய்யவுள்ள வீதிகள், இடங்கள் எங்கும் பாதுகாப்பு தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாக இப் பகுதிகள் பாதுகாப்புத் தரப்பினரின்

(10 ஆம் பக்கம் பார்க்க

## தலதா மாளிகைக்கு வாஜ்பாய் செல்வார்

கொழும்பு, ஜூலை 28

"சார்க்" மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு வரும் பிரதமர் வாஜ்பாய் நாளை கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மக்களின் சார்பில் யானை ஒன்றை அவர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிடம் அன்பளிப்புச் செய்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

'சார்க்' உச்சி மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் இந்த வைபவங்கள் இடம்பெறும்.

கொழும்பில் தங்கியிருக்கும்போது பிரதமர் வாஜ்பாய் பயன்படுத்துவதற்காக இரண்டு இந்திய ஹெலிகொப்ரர்கள் கொழும்பு வந்துள்ளன. (ஐ-21)

## நல்லூர் உற்சவம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழர் குறித்து வாஜ்பாய் கொழும்பில் பேச வேண்டும்!

### நாடாளுமன்றில் வை. கோ. வற்புறுத்து

சென்னை, ஜூலை 28

'சார்க்' மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கொழும்புக்குச் செல்லும் பிரதமர் வாஜ்பாய் ஈழத் தமிழர்கள் தாக்கப்படுவது தொடர்பான பிரச்சினையை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான வை. கோபாலசாமி இவ்வாறு கோரியுள்ளார்.

நேற்று மக்களவையில் கேள்வி நேரத்துக்குப் பின் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஈழத் தமிழ் மக்கள் இலங்கை அரச படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகி அங்கிருந்து இந்தியாவுக்குத் தப்பிவர முயற்சிக்கும் இவ்வேளையில் அவர்களின் பிரச்சினைகள் குறித்து இந்திய அரசு கேள்வி எழுப்புவது அவசியமாகும்.

இலங்கைக் கடற்படையினரால் இந்தியமீனவர்கள் தாக்கப்படுகின்றனர். இது குறித்தும் பிரதமர் இலங்கை அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் — என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிவந்த படகு இராமேஸ்வரம் கடற்பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவம் குறித்து திரு. கோபாலசாமி தமது கவலையை வெளியிட்டார். (ஐ-9)

## முத்திரைச்சந்தைபகுதியில் இரு இளைஞர்கள் பலி!

நல்லூர் முத்திரைச் சந்தையடியில் சங்கிலியன் வீதிப் பகுதியில் நேற்று நண்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்பு மற்றும் சூட்டுச் சம்பவங்களில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

அவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படுவதற்காக பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சங்கிலியன் வீதியில் உள்ள ஒரு வீடு சுற்றிவளைக்கப்பட்டபோது கிரனேட் வெடிக்க வைக்கப்பட்டதாகவும்—

அதைத் தொடர்ந்து வேட்டுக்கள் அப்பகுதியில் முழங்கியதாகவும்—

அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இளைஞர்கள் கொலையுண்ட வீட்டின் விறாந்தையில் இரத்த வெள்ளம் காணப்பட்டது.

(ஐ-2-5-6-51-139-15)

## 'கறுப்பு ஜூலை' வெளிநாடுகளில் அனுஷ்டிப்பு

லண்டன், ஜூலை 28

'கறுப்பு ஜூலை' தமிழ் இனப் படுகொலையின் 15 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய பல நிகழ்வுகள் ஐரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் கடந்த சனியன்று நடைபெற்றன.

லண்டன், பாரிஸ் மற்றும் கனடாவின் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்ட நினைவுக் கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையான ஈழத் தமிழர்கள் கலந்துகொண்டனர்.

கனடாவில் நடந்த ஓர் அஞ்சலி நிகழ்வில் அந்நாட்டு தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

(ஐ-9)

## யாழ். நகரில் நேற்று கறுப்புப் பட்டி தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலையின் 15 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நேற்று யாழ்ப்பாணத்தில் கறுப்புப் பட்டித் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ, புளொட் ஆகிய தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இந்தக் கறுப்புப் பட்டித் தின அனுஷ்டிப்பை ஏற்பாடு செய்தனர்.

முதலாவது கறுப்புப் பட்டியை யாழ். ஆயர் இல்லத்தில் வைத்து யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சுபத்திரன் அணிவித்தார்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் பொதுமக்களுக்கு இந்தக் கறுப்புப் பட்டி வழங்கப்பட்டது. பலரும் தமது சட்டைகளில் கறுப்புப்பட்டி அணிந்தபடி தமது அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டனர்.

## வன்னி அகதிப்பெண் குருநகர் கடலில் பலி!

### இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 28

வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து குடாக்கடல் ஊடாக வந்த இளம் பெண் ஒருவர் கடலில் உயிரிழந்தார். அவரின் சடலம் குருநகர்ப்பகுதியில் மீட்கப்பட்டது. அவருடன் பயணம் செய்த மற்றொரு பெண் உயிருடன் மீட்கப்பட்டார்; இருவர் காணாமற் போயுள்ளனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த பெண் ஒருவரே மீட்கப்பட்டு தற்போது குருநகர் சிநேரர் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றார்.

இவரும் இவரது அக்காவும் அக்காவின் இரு பிள்ளைகளும் கடந்த சனிக்கிழமை குடாக்கடல் ஊடாக வன்னியிலிருந்து வந்ததாகவும்—

குருநகர் இறங்குதுறையில் கரைசேர்வதற்கு இவர்கள் அனுமதிக்கப்படாததால் கடற்பாதையில் பரிச்சயமற்ற நிலையில் விடப்பட்ட இந்நால்வரில் மூவர் கடலில் மூழ்கியதாகவும்—

மூழ்கி உயிரிழந்த ஒரு பெண்ணின் சடலமும், மற்றைய பெண்ணும் மீனவர்களால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஸ்வராஜ்

கிர்லொச்கார்

டிராக்டர்



சேற்றிலும்
தரையிலும்
ஸ்வராஜ்

விசாரணைகட்கு: ஆனந்த சமரசிங்க/ஷீமல வியனகே தொ.பே 691186

ESTD 1841

வரையறுக்கப்பட்ட மெக்வூட்ஸ்

10 ஞானார்த்த பிரதீப மாவத்தை கொழும்பு -08

தொலைபேசி 697965-9 பெக்ஸ் 699454 ரெலெக்ஸ் 21153

காட்சியறை:

377, T.B. ஜெயா மாவத்தை, கொழும்பு-10, தொபேசி: 075 340287

(சி-4407)

---

## எமது வீடியோ CD வெளியீடுகள்

★ தர்மா
சுப்ப ஸோ-வின்
★ காட்சியும் கானமும் Vol: 05.
(புதிய பாடல் அடங்கலான)

ஓடியோ CD வெளியீடுகள்

★ மறவாதே கண்மணி. ★ நிலாவே வா!
★ என்றும் ஆனந்தம் ★ அண்ணன் தங்கச்சி

அண்மையில் சிங்கப்பூரில் வெளியான அனைத்து புதிய பழைய பக்திப் பாடல்கள் - கவசங்கள், ஸுப்பிரபாதங்கள் இவை யாவும் ஓடியோ CD யில் எம்மிடம் வெளிவந்துள்ளன.

என்றும் தரமான நேரடி ஓடியோ, வீடியோ CD பதிவுகளுக்கு

**சுப்பஸோ - வீடியோ**

யாழ்ப்பாணம். (சி/4408)

---

## மணிவிழா அழைப்பு

கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபரும், எமது பேராசிரியப் பெருந்தகையும், நாடறிந்த கவிஞரும் நாடக ஆய்வாளரும் தமிழ் அறிஞருமாகிய

கலாநிதி

**காரை. செ. சுந்தரம்பிள்ளை**

அவர்களுக்கு நாமெடுக்கும் மணிவிழா 30 - 07 - 98 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து கலாசாலையில் நடைபெறவுள்ளது.

மணிவிழா நாயகரிடம் கல்வி பயின்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் ஆகியோரையும், நண்பர்கள், கலைஞர்கள், உறவினர்கள் அனைவரையும் இவ் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், உப அதிபர்,
விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்.
ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

அன்பளிப்பு-
**விக்னா கல்விநிறுவனம்**
(57915)

---

## கண்ணீர் அஞ்சலி

**சண்முகம் கார்த்திகேசு**

லயன்ஸ் கழக வலயத் தலைவர்
லயன் கலாநிதி கா. குகபாலன்
அவர்களின் அன்புத் தந்தையார்
சண்முகம் கார்த்திகேசு

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்
பிராந்தியத் தலைவர்
பிராந்தியம் - 8
லயன்ஸ் கழகம்.

(சி/4401)

---

## சிவா

திரையரங்கு
(சிவன் கோயிலடி)
யாழ்ப்பாணம்.

சூர்யா, பிரகாஷ்ராஜ் ப்ரிதா நடித்த
**சந்திப்போமா**
(புதிய வெளியீடு)
தினசரி:- 10-30, 2-30
(57920)

---

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா, கவுண்டமணி, செந்தில்
நடித்த
**இந்தியன்**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4336)

---

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்
விஜய் நடித்த
**ப்ரியமுடன்**

புதன், வியாழன்
விஜயகாந்த் - ரேவதி
நடித்த
**வைதேகி காத்திருந்தாள்**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No: 070 - 212223
(57502)

---

## நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்.

அகல வெண் திரையில்
ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன!
3 ஆவது வெற்றி வாரமாக
சுப்பஸ்டார் ரஜனி
மீனா - செந்தில், வடிவேல் நடித்த
**முத்து**
(சினிமாஸ்கோப்)
காட்சிகள்:- 10-30, 2-30
(57905)

---

## மாநகரசபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை, 28

யாழ். மாநகரசபையின் மாதாந்த செயலமர்வுக் கூட்டம் நாளை புதன்கிழமை மேயர் பொன். சிவபாலன் தலைமையில் நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

(ஐ-6)

---

## ஸ்ரீ ஐங்கரன்

வெண் திரையில்
(சுஞ்சர் கடை)
சூர்யா, ப்ரிதா நடித்த
**சந்திப்போமா**
(புதிய வெளியீடு)
10-30, பி.ப. 2-30 மணி.

அடுத்த வெளியீடு
சிவாஜி, பத்மினி நடித்த
**உத்தம புத்திரன்**
(CD வெளியீடு)
(57921)

---

## A/L வினாத்தாள்கள்

★ விலங்கியல்
★ தாவரவியல்
★ பிரயோக கணிதம்
★ எண் கணிதம்
★ அளவையியல்
★ புள்ளிவிபரவியல்
★ தமிழ்
★ வணிகக் கல்வி

வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்

**BOND**

யாழ். நகர்.
(57914)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை.

பட்டப்பின்
கல்வித்தகைமை
புதிய அனுமதி

Post - Graduate
Diploma in Education
New Admission

## தெரிவுப் பரீட்சை

(முழு நேரம்)
1996 / 97

மேற்படி பரீட்சை 01-08-1998 (சனிக்கிழமை) நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குத்தோற்றத் தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை 29-07-1998 (புதன்கிழமை) பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர்.

27 - 07 - 1998

(சி/4403)

---

# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் கணேசன்

(அராலி)

தெல்லிப்பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் வீரசிங்கம் கணேசன் (25-07-98) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயபவானி, ஜெயபவன் (கணக்காளர், லண்டன்), மணிபவன் (பொறியியலாளர், அமெரிக்கா), பத்மபவன், Dr. கிருஸ்ணபவானி (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சுகுணபவானி (நீதிமன்ற ஆணைக்குழு, கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம், K. K. S.), சூரியஜோதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பரமேஸ்வரி, மங்களேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்றவர்களான யோகநாதன், அற்புதநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், க. கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர், கொழும்புத்துறை), நவரத்தினம் (கட்டட ஒப்பந்தகாரர், அராலி), முத்துமாரி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-7-98) செவ்வாய்க்கிழமை மு. ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி

அராலி தெற்கு,
அராலி.

(57919)

## மோகன் சுந்தரராசா

(771 ஆம் இலக்க முன்னாள் தனியார் வாகன நேர சூசி பதிவாளரும் சாரதியும்)

உடுவிலை வசிப்பிடமாகக்கொண்ட மோகன் சுந்தரராசா (இராசண்ணை) 26.07.98 அன்று திருகோணமலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் நாகம்மாவின் (உடுவில் மகளிர் பாடசாலை முன்னாள் ஆசிரியை) அன்புக்கணவரும், மோகனதாசன் (மோகன்பெயின்ரர். உடுவில்), மோகனேஸ்வரி (கனடா), ஸ்ரீரங்கதாஸ் (ஸ்ரீ-ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசபூபதியின் (ரஞ்சி — உடுவில்) மாமனாரும், மோகனவாணி (உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவி), ஸ்ரீ கார்த்திகா, பவித்திரா (இராமநாதன் கல்லூரி), ஸ்ரீ கபிலன் (அ. மி. த. க பாடசாலை, உடுவில்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் திருகோணமலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
சு. மோகனதாசன்
(மகன் — மோகன்)

மோகன் ஆட்ஸ்,
உடுவில்.

(சி-4396)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினை;
# ஒகஸ்ட் 12க்கு முன் சுமுகமான தீர்வு

## வெங்கையா நாயுடு தெரிவிப்பு

சென்னை, ஜூலை 28

காவிரி நீர்ப் பிரச்சினைக்கு அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன் பிரதமர் வாஜ்பாய் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு தீர்வு ஒன்றை காண்பார் என்று பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர்களில் ஒருவரான வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, கர்நாடக முதலமைச்சர்களுடன் பேச்சு நடத்திஇப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும்—

இப் பிரச்சினையால் வாஜ்பாய் அரசுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

மத்தியில் பதினொரு மாதங்கள் ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணி அரசில் தி.மு.க. இருந்தும் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முதலமைச்சர் மு. கருணாநிதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என நாயுடு குற்றஞ் சாட்டினார்.

அ.தி.மு.க. மீதோ பாரதிய ஜனதா மீதோ குற்றம் சாட்ட கருணாநிதிக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக கர்நாடக, தமிழ்நாடு அரசுகளுக்கிடையே புதிய பேச்சுவார்த்தை நடைபெறுவதை தான் எதிர்ப்பதாக ம.தி.மு.க. பொதுச் செயலர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு தனது அதிகாரத்தைப்பயன்படுத்தி இப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்றும் —

காவிரி நடுவர் மன்றம் விடுத்த இடைக்காலத் தீர்வை அமுல்படுத்துவதற்கான திட்டத்தை மத்திய அரசு வெளியிட வேண்டும் என்றும்—அவர் கூறினார்.

காவிரி நடுவர் மன்றத்தின் தலைவர் தனது பதவியை இராஜினாமாச் செய்ததற்கு முன்னாள் பிரதமர் தேவகௌடாவும் கருணாநிதியும் தான் காரணம் என்றும் கோபாலசாமி குற்றஞ் சாட்டினார்

இதேவேளை காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால தீர்ப்பை அமுல் செய்யுமாறு பிரதமர் வாஜ்பாய் கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று ராஷ்டிய ஜனதா தன் தமிழ்நாடு பிரிவு தலைவர் ஜெகநிலப்பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இடைக்காலத் தீர்ப்பு அமுல் செய்யப் படுவதை உறுதி செய்ய வேண்டியது மத்திய அரசின் பொறுப்பாகும் என்றும் அவர் கூறினார். (இ-ரி)

## உலக அரங்கில்

## மணிலாவில் வெளியுறவு செயலர் கூட்டம்

மணிலா, ஜூலை 28

தென்கிழக்காசிய நாடுகளின் வெளியுறவுச் செயலர்கள் கூட்டம் நேற்று ஆரம்பமானது.

இக் கூட்டம் அணு ஆயுத தடையினை தனது பிரதான கொள்கையாக வலியுறுத்தவுள்ளது. (இ)

## நடுத்தர ஏவுகணையை ஈரான் பரிசோதித்தது

தெஹ்ரான் ஜூலை 28

நடுத்தர ஏவுகணை சோதனையை ஈரான் வெற்றிகரமாக நடத்தி உள்ளது.

இஸ்ரேல், சவூதிஅரேபியா, துருக்கி, ரஷ்யா ஆகிய நாடுகளைத் தாக்கும் சக்தி வாய்ந்தது இந்த ஏவுகணை என்று தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளின் உதவியின்றி ஈரான் இந்த சோதனையை நடத்தி உள்ளது.

இதே வேளை பலமான ஆபத்துக்களை எதிர்நோக்கும் ஈரான் இது போன்ற ஏவுகணை சோதனையை நடத்தியது நியாயமானது என்று ஈரானிய பத்திரிகைகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன. (இ-5)

## கொசோவோவில் கடுஞ் சண்டை!

பிரிஸ்ரினா, ஜூலை 28

யூகோஸ்லாவியாவின் கொசோவோ மாகாணத்தில் கொசோவோ விடுதலை இராணுவத்துக்கும், அரச படையினருக்கும் இடையே கடுஞ்சண்டை மூண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் தீவிரவாதிகள் நடத்திய பெரும் தாக்குதல் ஒன்று தோல்வியில் முடிந்ததை அடுத்து சில தினங்களாக அமைதி நிலவி வந்தது. நேற்று முன்தினம் இரவு மீண்டும் மோதல்கள் வெடித்தன. சண்டை நடைபெறும் கொசோவோவின் மத்திய பகுதிக்குள் எவரும் செல்ல முடியாதவாறு சேர்பிய பொலீஸார் அப்பகுதியை மூடியுள்ளனர்.

## யுரேனியம் திருடிய இருவர் கைதாகினர்!

சென்னை, ஜூலை 28

3 கோடி மதிப்புள்ள ஆறு கிலோ யுரேனியத்தை திருடியதாக தமிழ் நாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இருந்தே யுரேனியம் திருடப்பட்டது.

கதிரியக்கப் பொருள்களில் ஒன்றான யுரேனியம் அணுகுண்டு தயாரிக்க உதவுகிறது.

கைது செய்யப்பட்ட இருவரும் சென்னை வாசிகள் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## இனப்படுகொலையை நிறுத்துமாறு இலங்கை அரசைக் கோருக!

### வாஜ்பாய்க்கு தமிழ்க்கட்சிகள் மகஜர்

சென்னை, ஜூலை 28

ஈழத் தமிழர் மீதான இனப்படுகொலைகளை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுக்கும் படி நெடுமாறன் தலைமையிலான தமிழர் தேசிய இயக்கம் உட்பட பல தமிழ்க் கட்சிகள் வாஜ்பாய் அரசுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளன.

பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் வீடிழந்து வன்னிக் காடுகளில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு போதிய வசதிகள் கிடைக்காததால் அவர்களில் பலர் இறந்து போகின்றனர்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம் வன்னிக் காட்டிலுள்ள தமிழர்களுக்கு கிடைத்த மனிதாபிமான உதவிகளை இலங்கை அரசு நிறுத்தி விட்டது. மீண்டும் வன்னியில் செஞ்சிலுவை சர்வதேசக்குழு செயற்பட இலங்கை அரசை வாஜ்பாய் வற்புறுத்த வேண்டும்.

இப்படி அம் மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளது. (இ-ரி)

## 1037 ஈராக்கியர் பற்றி தகவல்இல்லை

பாக்தாத் ஜூலை 28

1991 ஆம் ஆண்டு ஈராக்குக்கும் குவைத்துக்கும் இடையேயான வளைகுடா யுத்தத்தின் போது காணாமற் போன ஆயிரத்து 37 ஈராக்கியரின் நிலை பற்றி குவைத் எதுவித தகவலும் வெளியிடாது மறைக்கின்றது என ஈராக் குற்றஞ் சாட்டி உள்ளது. (இ-ரி)

## ஆப்கானுக்கான உதவித்திட்டம் நிறுத்தம்

ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளவிருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை ஐரோப்பிய கூட்டமைப்பு நிறுத்தி உள்ளது.

ஆப்கானிஸ்தானில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுவந்த அமைப்புக்களை தலிபான் இயக்கம் வெளியேற்றியதை அடுத்தே ஐரோப்பிய கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்தது.

## செம்மணி புதைகுழி விவகாரம் பற்றிய உண்மை நிலையை வெளிப்படுத்துக

### காணாமற்போனோர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் 400 சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கிருஷாந்தி கொலை வழக்கு முதலாம் எதிரி கோப்ரல் ராஜபக்ச தெரிவித்துள்ள கூற்றின் உண்மை நிலையை தெரிவிக்குமாறு கோருகின்றோம்.

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் மேற்கண்டவாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கிருஷாந்தி கொலை வழக்கு முதலாம் எதிரி தெரிவித்த கருத்தால் நாம் கதிகலங்கிய நிலையில் உள்ளோம்.

தங்கள் ஆட்சியில் பல இடங்களில் புதைகுழிகள் தோண்டி சடலங்களை வெளியே எடுக்க நடவடிக்கை எடுத்தீர்கள்.

அதே போன்று செம்மணியில் புதைகுழி உள்ளதாக வெளியாகிய தகவல் குறித்து உண்மை நிலைப்பாட்டை வெளியிட ஏற்பாடு செய்யுங்கள்.

தங்களை எமது அமைப்பு ஆறுமாதங்களுக்கு முன்னர் சந்தித்த போது 6 மாத காலத்தில் சுயாதீன கமிசன் அமைப்பதாக உறுதி கூறினீர்கள். அதில் இடம் பெற ஐந்து பிரதிநிதிகளின் விவரங்களையும் அனுப்பியிருந்தோம்.

6 மாதங்கள் கடந்த நிலையில் இன்னமும் கமிசன் நியமிக்கப்படவில்லை. ஆகவே கமிசன் நியமித்து உதவவும் இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


## கண்ணீர் அஞ்சலி

3 ஆம் ஆண்டு வணிகத்துறை மாணவி
மல்லிகாதேவி மார்க்கண்டு
அவர்களின் அன்புத் தந்தை
**வைரமுத்து மார்க்கண்டு**
அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்ளுகின்றோம்.

3 ஆம் வருட மாணவர்கள்
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.
(57911)


## வண்ணாத்திப் பாலத்தில் துணிகரக் கொள்ளை

சாவகச்சேரி, ஜூலை 28

சாவகச்சேரியிலிருந்து புத்தூர் நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவரையும் சிறுவன் ஒருவனையும் வழிமறித்த இரு இளைஞர்கள் அவர்களிடம் இருந்து ரூ. 30 ஆயிரம் பணத்தையும், தங்கச் சங்கிலி ஒன்றையும் அபகரித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய் நண்பகல் சாவகச்சேரி புத்தூர் வீதியில் ஆள்நடமாட்டம் குறைந்த வண்ணாத்திப் பாலத்திற்கு அருகில் இடம்பெற்றது. (இ-31)


PILLAIYAR COMMUNICATION
பிள்ளையார் தொலைத் தொடர்பு சேவை
**உள்நாடு, வெளிநாடு**

அமைதியான சூழலில், எதுவித தாமதமின்றி, மிகக்குறைந்த சகாயக் கட்டணத்துடன் தொலைபேசி அழைப்புக்களைப் பெற நாடுங்கள்.

சகல வசதியுடன் தங்குமிடமும், விசாலமான வாகனத்தரிப்பிடமும் உண்டு.

T. P. NO:- 021 - 2829

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
(57912)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


காணவில்லை

24-7-98 அன்று த. சிறி, 16/7, சீனியர்லேன், கலட்டி என்ற இடத்திலிருந்துகறுப்பு நிறமான மாடொன்று காணாமற்போய் விட்டது. அதைக்கண்டவர்கள் தயவு செய்து மேற்குறித்த முகவரியில் அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [57887]

அபிராமி திருமணசேவை

வெளிநாட்டுமணமக்களுக்கு உள்நாட்டு லெக்ஸர், G. S. ஆகிய மணமகன்களுக்கும் படித்த பெண்கள் தேவை. தொடர்பு: பரந்தாமன் ராசாத்தி, ஆடியபாதம் வீதி, 1 ஆம் ஒழுங்கை, கொக்குவில், அபிராமி திருமண சவை, [55460]

கலா மீன்கள

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய இனங்களை உடைய கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. A. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை) 12 மணியிலிருந்து பார்வையிடலாம். (57904)


# பெருமளவு பனை விதைகளை நடுவதற்கு சபை நடவடிக்கை

வடமராட்சி, ஜூலை 28

யாழ். குடாநாட்டில் இம்முறையும் மாரிகாலத்தின் போது பல்லாயிரக்கணக்கான பனம் விதைகளை நடுவதற்கு இலங்கை பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

குடாநாட்டில் கடந்தகால சம்பவங்களால் பனை மரங்கள் அழிக்கப்பட்டதை யடுத்து பனை நடுகைத்திட்டத்தை பனை அபிவிருத்திச்சபை சென்ற வருடம் முதல் ஆரம்பித்தது.

சென்ற வருடத்தில் பெரும் அளவிலான பனம் விதைகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் பொது அமைப்புக்கள், பொது நிறுவனங்களின் உதவியுடன் நடப்பட்டன.

சென்ற வருடத்தைப் போன்று இம்முறையும் பனை நடுகையை பாரிய அளவில் மேற்கொள்ள பனம் பழம் விழும் காலத்தில் பனம் விதைகளை சேகரிக்க பனை அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

சேகரிக்கப்படும் பனம் விதைகள் மாரிகாலத்தில் குடாநாட்டில் பல்வேறிடங்களிலும் நடப்படும். (இ-173)

## விசாரணை அலுவலர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு கொழும்பிலிருந்து புலனாய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இது வரை காலமும் வவுனியாவில் கடமையாற்றிய ஆர். பி. சந்திரசேகரா என்பவரே யாழ். அலுவலகத்துக்கு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு வின் தலைமையகத்தினால் நியமனம் செய்யப்பட்டார். (இ-ரீ-5)

**உதயன் ஆதரவு**

## கூடைப்பந்தாட்டப் போட்டி இறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை, 28

'உதயன்' நிறுவனம் மற்றும் யாழ். றோட்டறிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக் கழகம் நடத்திய கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் பல்கலைக் கழகக் கூடைப் பந்தாட்டத் திடலில் நடைபெறவிருக்கின்றன.

யாழ். பல்கலைக் கழக விவசாய பீடாதிபதி ஆர். விஜயரத்தினம் பிரதம விருந்தினராகவும், யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் ஏ. பஞ்சலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர்.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

★ பி.ப. 4 மணி — பெண்கள் பிரிவு—பல்கலைக் கழக அணி எதிர் அரியாலை வி. க. அணி.

★ பி. ப. 5 மணி—ஆண்கள் பிரிவு—பல்கலைக்கழக அணி எதிர் பற்றீசியன் அணி. (இ-3)

## ராணுவக் கட்டுப்பாடாற்ற பகுதியில் வாந்திபேதி

வவுனியா, ஜூலை 28

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் சுண்டுக்குளம் பகுதியில் ஒருவர் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி வவுனியாவில் இருந்து இவர் வந்ததாகவும் —

21 ஆம் திகதி இவர் வாந்திபேதியால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் —

இவர் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும்— தெரிவிக்கப் பட்டது. (இ-3-164)

## தென்மராட்சி அபிவிருத்தி வேலைக்கு ரூ. 6 லட்சம்

### யுனிசெவ் ஒதுக்கீடு

தென்மராட்சிப் பகுதியில் பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள யுனிசெவ் சுமார் ஆறுலட்சம் ரூபாவை ஒதுக்கி உள்ளது.

கொடிகாமம் தவசிகுளம், மட்டுவில் மத்தி, கைதடி மேற்கு ஆகிய பகுதிகளில் தலா 50 ஆயிரம் ரூபா செலவில் பாலர் பாடசாலைகளையும்—

பாடசாலைகளின் வளவில் 25 ஆயிரம் ரூபா செலவில் மலகூடங்களையும் அமைக்க யுனிசெவ் உதவும்.

தாவளை இயற்றாலைப் பிரிவில் 10 மலகூடங்களும், மந்துவில் கிழக்குப் பிரிவில் 10 மலகூடங்களும், கொடிகாமம் தவசிகுளம் பிரிவில் 15 மலகூடங்களும், கெற்பலி பிரிவில் 5 மலகூடங்களும், மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 3 மலகூடங்களும் 2 சலகூடங்களும் அமைக்க ரூபா மூன்று லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் 15 பொதுக் கிணறுகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## வலிகாமம் மேற்குக்கு ரூ. 5,35,000 ஒதுக்கீடு

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு 5லட்சத்து 35 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வன்செயல் காரணமாக பாதிக்கப்பட்ட வட்டு. கிழக்கு அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோவில் புனரமைப்புக்கு இரண்டரை லட்சம் ரூபாவும்—

அராலி வண்ணபுரம் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் கோயில் புனரமைப்புக்கு இரண்டரை லட்சம் ரூபாவும்—

சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையத்துக்கு தளபாடங்களும விளையாட்டு உபகரணங்களும் கொள்வனவு செய்வதற்கு 25 ஆயிரம் ரூபாவும்—

சங்கானை வெல்வில் அறநெறிப்பாடசாலைக்கு தளபாடம் கொள்வனவு செய்வதற்கு 10 ஆயிரம் ரூபாவும் —ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-ரி)

## விஷ ஜந்துவால் கடியுண்ட சிறுமி மரணம்

ஊரடங்கு வேளையில், படுக்கையில் வைத்து விஷ ஜந்து ஒன்றினால் கடியுண்ட பாடசாலை மாணவி ஒருவர் மரணமானார்.

இரவு அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வருவதற்கு வாகன வசதி கிடைக்காததால் மறுநாள் காலை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில நிமிட நேரத்தில் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம், கச்சாய் வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் தர்சினி (வயது 12) என்பவரே மரணமானவராவார்.

இரவு படுக்கையின்போது கழுத்தில் ஏதோ கடித்து விட்டதாக சிறுமி தெரிவித்ததாகவும் —

பெற்றோர் விளக்கை எரியவிட்டு தேடியபோது எதனையும் கண்டுகொள்ள முடியவில்லை என்றும் —

பின்னர் சிறுமி வேதனையால் துடித்ததை அவதானித்த பெற்றோர் லாம்பின் உதவியுடன் கொடிகாமம் சந்தியில் உள்ள படையினரிடம் அனுமதி பெற்றபோதிலும் இப்பகுதியில் வாகன வசதி கிடைக்காததால் காலை வரை காத்திருந்ததாகவும் —

காலையில் வாகனத்தில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட சில நிமிட நேரத்தில் சிறுமி மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## தமிழ்த் தினவிழா

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திருமதி ப. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஓய்வு பெற்ற அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசன் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார். திருமதி அன்பு கணேசதாசன் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்குவார். (இ-17-30)

## சாவகச்சேரி சந்தையில் திருத்த நடவடிக்கை

சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள சாவகச்சேரிப் பொதுச் சந்தையின் உட்பகுதியில் உள்ள சேதமடைந்த கொட்டகைகள் சாவகச்சேரி நகரசபையால் திருத்தப்பட உள்ளன.

பழக்கடையின் ஒரு பகுதி, வெங்காயக்கடை, மரக்கறிக் கடை என்பனவற்றின் கொட்டகைகளே திருத்தப் பட உள்ளன.

திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக பழக்கடையின் ஒருபகுதியின் பழைய கொட்டகை கழற்றப்பட்டுள்ளது. (இ-31)

## மலர் வெளியிட நடவடிக்கை

நவாலி, ஜூலை 28

காரைநகர் ஈழத்துச் சிதம்பர குடமுழுக்கு விழாவினை முன்னிட்டு குடமுழுக்குவிழா மலரொன்று வெகுவிரைவில் வெளியிடப்படவுள்ளது. இம்மலரில் இந்திய, இலங்கைப் பெரியார்களின் ஆக்கங்கள் அதிகளவில இடம் பெற உள்ளன. (இ-100-9)


## தொலைந்துவிட்டது

சிவானந்தம் யோகலிங்கம் ஆகிய எனது I. C., பிரிகேட் பாஸ், யொப் காட், விமான அனுமதி என்பன அடங்கிய எனது பேர்ஸ் நெல்லியடிக்கும் கோப்பாய்க்கும் இடையில் தொலைந்து விட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நீர்வேலியில் அத்தியார் பாடசாலைக்கு முன்னால் உள்ள கணேச லிங்கம்வீட்டில் ஒப்படைக்கவும்.

(சி/4399)

## அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயம்

இன்று (28 - 07 - 1998) கொடியேற்றத் திருவிழா

இனிதே நடைபெற சித்திவிநாயகப் பெருமானின் பேரருளை நாடி நிற்கின்றோம்.

செல்வி பூ. விஷ்ணுகுமாரி
செல்வி பூ விஷ்ணு ஸ்ரீ

''திருவேங்கடம்'',
அச்சுவேலி.

(57903)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 — 04 — 1945

மறைவு 28 — 07 — 1997

### திருமதி இராசலெட்சுமி இராமநாதன்

தன் நலம் நாடாது தன் சகோதரியின் நலத்தைப் பேணிக் காத்த எம் அன்புச் சகோதரியின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்;

சகோதரிகள், பெறாமக்கள்,
மருமக்கள்.

400/1, நாவலர் வீதி,
அரியாலை.

(57902)

## கண்ணீர் அஞ்சலி

மில்க்வைற் தொழிலதிபரும், சமய சமூகத் தொண்டரும் ஆகிய சிவநெறிப்புலவர்

**கலாநிதி க. கனகராசா (ஜே.பி)**

அவர்களின் மறைவு குறித்து நாம் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

மண்ணைநகம் ஸ்ரீ முருகன்
இந்து சமய விருத்திச் சங்கம்.

(சி / 4395)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சிப் பகுதியில் குளங்களை ஆழமாக்க 'கெயர்' நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

தென்மராட்சிப் பகுதியில் தூர்ந்து போயுள்ள குளங்களை ஆழமாக்கும் திட்டம் ஒன்றைக் கெயர் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் ஏற்படும் வரட்சி நிலையைக் கருத்திற் கொண்டு, மழை நீரைத் தேக்கி வைத்து விவசாயத்துக்கு உதவும் நோக்குடனேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்களின் உதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(இ-3)

## வடக்கு-கிழக்கு மக்கள் பிரச்சினை பற்றி அரச அதிபர்களுடன் ஆளுநர் பேசுவார்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடக்கு-கிழக்கில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா அந்த மாகாணத்தைச் சேர்ந்த அரச அதிபர்களுடன் எதிர்வரும் முதலாம் திகதி ஆராயவுள்ளார்.

கொழும்பில் உள்ள ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் அரச அதிபர்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் எடுத்து விளக்கப்படும்.

நிவாரண வெட்டு, புனர்வாழ்வுப் பணிகள், மாகாண சபையின் நிதி ஒழுங்காகக் கிடைக்காமை உட்படப் பல விடயங்கள் குறித்து ஆளுநருக்கு அரச அதிபர்கள் விளக்கிக் கூறுவார்கள்.

(இ-3)

## திருடர் தொல்லை

அரியாலை, ஜூலை 28

ஈச்சமோட்டைப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு இப்பகுதியிலுள்ள சில வீடுகளுக்குள் புகுந்து திருட எடுத்த முயற்சி கைகூடவில்லை.

(இ-17)

## சுங்கத்தீர்வை மோசடியில் ரூ. $1\frac{1}{4}$ கோடி அபராதம்

கொழும்பு, ஜூலை 28

சுங்கத்தீர்வை மோசடிஒன்றில் ''கிறேன் எவிலோட்டர்'' என்னும் நிறுவனத்துக்கு ஒரு கோடியே 20 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றிலேயே சுங்க மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்கு ஆகக்கூடுதலான அபராதம் விதிக்கப்பட்டது இந்த வழக்கில்தான் எனத் தெரிவிக்கப்பட்டது.

கோதுமை அரிசியை இறக்குமதி செய்ததில் சுங்க மோசடி செய்யப்பட்டதாகவே இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

(இ-10-3)

## விளையாட்டு அதிகாரியின் இடமாற்றம் ரத்து

திருகோணமலை, ஜூலை 28

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் இருந்து அம்பாறைக்கு இடமாற்றம்செய்யப்பட்ட உதவி விளையாட்டுப்பணிப்பாளர் ஏ. எஸ். குணரத்தினத்தின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஆளுநருக்கு அவர் செய்த முறையீட்டை அடுத்து அவரது இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## குமுதினி படகுச் சேவை: அமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

'குமுதினி' படகுச் சேவையை ஆரம்பிப்பதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌசியுடன் யாழ்.மாவட்ட எம். பி. எஸ். சிவதாசன் இன்று பேச்சு நடத்தவிருக்கிறார்.

கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவுக்குச் சென்ற அவரிடம் அப்பகுதி மக்கள் தமது பயணப் போக்குவரத்துப் பிரச்சினை குறித்து எடுத்துக் கூறினர்.

நயினாதீவு உற்சவத்தின் இறுதி நாள்களில் இந்தப் படகு சேவையில் ஈடுபட்டதாகவும் —

அதன் பின்னர் இந்தப் படகு சேவையில் ஈடுபடவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-111)

## நல்லூர் உற்சவ காலத்தில் தீ விபத்தைத் தவிர்க்க மாநகரசபை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை28

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் தீ விபத்துக்கள் ஏற்படுவதைத்தவிர்ப்பதற்காக கச்சான் கடை உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

உற்சவகால நடைமுறைகள் பற்றி கடந்த வியாழன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தீயணைப்பு தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் திருவிழாக் காலத்தில் தீயணைப்பதில் உள்ள சிரமங்கள் பற்றி விளக்கமளித்தார்.

மாநகர சபையின் தீயணைப்பு பிரிவிடம் உயர் அமுக்கமுடைய தீயணைப்பு கருவிகள் இல்லை. எனவே நாம் நீரிறைக்கும் இயந்திரத்தினாலேயே தீயை அணைக்க நீரை விசிற வேண்டியுள்ளது. கூடிய தூரத்திற்கு பவுசரிலிருந்து நீரை விசிற வேண்டி ஏற்படும் போது தண்ணீர் மெதுவாகத்தான் போகும் இதனால் உடனடியாக தீயை அணைக்க முடியாது என குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூடுதலாக கச்சான் கடைகளில்கடலை வறுக்கநெருப்பு மூட்டும் வேளைகளிலேயே தீ பரவும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறு ஏற்படாதவாறு அடுப்புகளை அமைப்பதில் அக்கறை கொள்ள வேண்டும். தீ விபத்து திடீரென ஏற்பட்டால் தவிர்ப்பதற்காக ஒவ்வொருவரும் மூன்று முதல் ஐந்து வாளிகளில் மணலும், சாக்குகளும் வைத்திருக்க வேண்டும் என்றார்.

(இ-ரி)

## ஓவியப் போட்டி

வலி.தெற்கு, ஜூலை 28

இலங்கை யுனெஸ்கோ நிறுவனத்தினரின் ஆதரவில் ''ஓசோன் படலத்தைப்பாதுகாத்தல்'' சம்பந்தமான சித்திரஓவியப் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற உள்ளன.

(இ-152-9)

## வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை28

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரிகளின் கற்கைநெறிகளான உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (எச். என். டி. ஏ), உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா (என். என். டி. சி) போன்றவற்றில் சித்தி அடைந்தவர்களை வணிகமாணிகளாகக் கருதி அவர்களுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை யாழ். மாவட்ட. வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் 46/90 இலக்கம்கொண்ட சுற்றறிக்கையின் படி உயர் தேசிய கணக்கியல், வர்த்தக டிப்ளோமாக்கள் வணிகமாணிக்குச் சமமான வை எனக்குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## பாடசாலைகளுக்கு நூலக வசதி

பருத்தித்துறை, ஜூலை28

கல்வி உயர்கல்வி அமைச்சின் பொதுக் கல்வித் திட்டத்தின்கீழ் நாடுபூராகவுள்ள சுமார் 4 ஆயிரம் பாடசாலைகளில் நூலக வசதிகள் அபிவிருத்திசெய்யப்படவுள்ளன.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ள படிவங்களை உடனடியாகப் பூரணப்படுத்தி அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(இ-118-9)

## லொறி திருத்தப்பட்டு சேவையில்

அரியாலை, ஜூலை 28

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிதாக லொறி ஒன்றைத் திருத்தி அமைத்து சேவையில் அமர்த்தியுள்ளது.

சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் இந்தப் பழைய ''பென்ஸ்'' லொறி திருத்தப்பட்டதாகச் சங்கத் தலைவர் சீ.வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

(இ-17)

## சஞ்சிகை வெளியீடு

அரியாலை, ஜூலை 28

யாழ். திருமறைக்கலா மன்றத்தின் ''ஆற்றுகை'' சஞ்சிகை வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

(இ-17)

# செய்திக் கொத்து

## நோயாளர் அதிகரிப்பு

வடமராட்சி, ஜூலை 28

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்துள்ளது.

(இ-173)

## இளைஞர்கள் சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

இணுவில் அருள்மிகு காரைக்கால் சிவன் கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இணுவில் கிழக்கு உதயசூரியன் சனசமூக நிலைய இந்து இளைஞர்களால் கோயிலில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ-9)

## கலை நிகழ்வு

நெல்லியடி, ஜூலை 28

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசார நிகழ்வில் கலந்து கொள்ளத் தென்னிலங்கை இசைக் கலைஞர்கள் வருகைதரவுள்ளனர்.

இக்கலை நிகழ்ச்சி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி திறந்தவெளி அரங்கில் அடுத்த மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(இ-109-9)

## கவனிப்பாரற்ற ச. ச. நிலையம்

வலி. தென் மேற்கு, ஜூலை 28

நவாலி வடக்கு சனசமூக நிலையம் கவனிப்பார் அற்ற நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தினமும் வாசகர்களுக்காகப் பத்திரிகைகள் போடப்பட்டு வருகிற அதே வேளை சனசமூக நிலையக் கதவுகள் பூட்டப்படாது திறந்த நிலையிலேயே உள்ளன. எனவே சிறிது நேரத்திலேயே பத்திரிகைகள் காணாமற் போய் விடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-185-9)

## இணைப்பாளர் நியமனம்

குருநகர், ஜூலை 28

யாழ். பிராந்தியத்துக்கான பண்பாட்டலுவல்கள் இணைப்பாளராக யாழ். கல்வி வலயம் ஒன்றின் தமிழ்த்துறை கல்வி ஆலோசகர் எஸ். சிறிதயாளன் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(இ-51-9)

## மிதி வெடி அபாய கருத்தரங்கு

பருத்தித்துறை, ஜூலை28

கோப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் அடிக்கடி மிதிவெடியினால் பலர் பாதிக்கப்படுவதைத் தொடர்ந்து மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறையினால் அண்மையில் நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் கோப்பாய்ப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல கிராம சேவகர்களும், சுகாதாரப் பரிசோதகர்களும், மருத்துவ மாதர்களும் கலந்து கொண்டனர். ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளிலும் விரைவில் மிதிவெடி அபாயம் தொடர்பான கருத்தரங்கு நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ-118-9)

## வெளிக்களப் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 28

நல்லூர்ப் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் பயிற்சியாளர்களில் ஒரு பகுதியினர் அண்மையில் வெளிக்கள சுகாதார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொல்களங்களில் இறைச்சிப் பரிசோதனை, சூழல் சுகாதார மதிப்பீடு, தொற்றுநோய் பரிசோதனை, அவற்றுக்கான தடுப்பு முறைகள், மாணவர்களுக்கான சுகாதாரப் பரிசோதனை ஆகிய வெளிக்கள நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டனர்.

(இ-9)

## பன்னிரு திருமுறை படிப்பு பூர்த்தி

சுழிபுரம், ஜூலை 28

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடாலயத்தில் சென்ற மூன்று மாதங்களாக தினமும் நடைபெற்று வந்த பன்னிரு திருமுறைப்படிப்பு பூர்த்தியடைந்துள்ளது.

நிறைவு வைபவத்தில் பலர் பங்கு கொண்டு நிறைவு செய்தனர். பன்னிரு திருமுறை ஏடுகள் யாவும் பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமாள் ஆலயத்தில் நடைபெறும் படிப்பில் சேர்க்கப்பட்டன. இப்பகுதியில் தொடர்ந்து பல்வேறு இடங்களில் படிக்கப்பட்டு வரும்இந்தசிவகைங்கரியம் சென்ற ஐந்து ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. திருத்தொண்டர் ந. சிவரஞ்சன் வழிநடத்தலோடு இப் படிப்பு நிகழ்கின்றது.

(இ-28-9)

## உரும்பிராயில் கோழிகளுக்கு நோய்

உரும்பிராய், ஜூலை 28

உரும்பிராய்ப் பகுதியில் கோழிகள் தூங்கல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலத்தில் காணப்படும் கடும் வெப்பமே இதற்குக் காரணம் என விலங்கியல் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-154-9)

## ஐ.நா. உதவியில் ச. ச. நிலையம்

பருத்தித்துறை, ஜூலை28

அச்சுவேலி இளங்கதிர் பாலர்பாடசாலை கட்டடமும் சனசமூக நிலையக் கட்டடமும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதியுதவியில புனரமைக்கப்பட்டுள்ளது. இரண்டு லட்சம் ரூபா பெறுமதியில் புனரமைக்கப்பட்ட இக் கட்டடம் வெகு விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

(இ-118-9)

## கட்டாக்காலிகளால் பயிர்கள் நாசம்

வட்டுக்கோட்டை, ஜூலை 28

அராலி வயல்வெளிகளில் பயிரிடப்பட்டுள்ள பம்பாய் வெங்காயம், பாசிப்பயறு, எள்ளு போன்ற பயிர்கள் கட்டாக்காலிகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

பகல் வேளைகளில் விவசாயிகள் காவல் காக்கும் போதும் ஊரடங்கு அமுலில் உள்ள இரவு வேளைகளில் மாடுகள் வயல்வெளிகளில் அழிவை ஏற்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

(இ-12-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகம ஆஸ்பத்திரியில் ஞாயிறு வேலை நிறுத்தம்

கொழும்பு ஜூலை 28

கொழும்பு வடக்கு நாகம ஆஸ்பத்திரியில் டாக்டர்களும், ஊழியர்களும் ஞாயிறன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இரவு டாக்டர் ஒருவரும், தாதிகள் மூவரும் ஆளும்கட்சி அரசியல்வாதி ஒருவரின் மெய்ப்பாதுகாப்பாளர்களால் தாக்கப்பட்ட தாகக்கூறப்படும்சம்பவத்தை தொடர்ந்தே இந்த வேலை நிறுத்தம்மேற் கொள்ளப்பட்டது.

நாகம ஆஸ்பத்திரியில் நோயாளர் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

இத் தாக்குதலைக் கண்டித்தும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும், இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா நேற்றுப் பிற்பகல் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினருடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

(இ-9-21)

# பேரூட் நிறுவனம் நடத்தும் சமூக அபிவிருத்தி பணிகள்

யாழ்ப்பாணம் ஜூலை 28

பேரூட் நிறுவனம் யாழ். மாவட்டத்தில் தற்போது 38 கிராமங்களில் சமூக அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டு வருவதாகமேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த அடம் வோல்டர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பருத்தித்துறை, சங்கானை சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளிலே பேரூட் நிறுவனம் இப்பணிகளைச் செய்து வருகிறது.

மலசல கூடங்கள் புனரமைப்பு, சேதமடைந்த வீடுகள் திருத்தம், மது, சிகரட் போன்ற குடிவகைகளைப் பாவிப்பதை தவிர்ப்பதில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வைஏற்படுத்தல்போன்ற பணிகளை பேரூட் முன்னெடுத்து வருகிறது.

பேரூட் நிறுவனம் நேரடியாக எந்த உதவிகளையும் வழங்க மாட்டாது. கிராமிய அமைப்புகள் ஊடாக ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவிகளையும், நவீன தொழில்நுட்ப பயிற்சிகளையும்கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தைநிரந்தரமாக உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகிறது. இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-5 6)

# குடிசைக் கைத்தொழிலில் மகளிருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 28

வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் மகளிருக்கு சுய தொழில் கடன், குடிசைக் கைத்தொழிற் பயிற்சி போன்றவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள மகளிருக்கு உதவி புரிவதற்கென உருவாக்கப்பட்ட இந்த நிறுவனம் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்த உள்ளது.

மகளிர்கள் சுயதொழிலை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஆரம்ப நிதிவசதிகளைக் கடன் அடிப்படையில்வழங்குவதற்கு அது திட்டமிட்டுள்ளது.

அதேசமயம் குடிசைக் கைத்தொழிலுக்குத் தேவையான ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் வழங்குவதற்கும் திட்டமிட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் திட்டமிடல் பிரிவு ஒன்றை அமைத்துச் சேவையாற்றவும் ஏற்பாடாகி உள்ளது.

பனை அபிவிருத்திச் சபையினரும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்துக்குத் தேவையானவசதிகளைஏற்படுத்தித் தருவதாக உறுதியளித்துள்ளனர்.

(ஐ-9)

## வாழைகள் பாதிப்பு

உரும்பிராய், ஜூலை 28

நீர்வேலிப் பிரதேசத்தில் வாழை பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளோர் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த மாதங்களில் இப்பகுதியில் வீசிய கடுங்காற்றினால் வாழைகள் முறிந்து அழிந்து விட்டன. இதனால் எதுவித வருமானமும் அற்ற நிலையில் இவர்கள் உள்ளனர்.

இந்த அழிவுகளுக்கு நிவாரணம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படவில்லை.

(இ-154 9)

# குளம் புனரமைப்பு

சுழிபுரம், ஜூலை 28

சுழிபுரம் மேற்கு நளவராயர் குளத்தை ஆழமாக்கும் வேலைகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. அதிகாரிகள், கமக்காரர்கள் உட்படப் பலர் இந்த ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-28-9)

# சந்தைக் கட்டடம் புனரமைப்பு

அரியாலை, ஜூலை 28

பாஷையூர் சந்தையின் கட்டடப் பகுதி ஒன்று புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது இக்கட்டடத்தின் கூரைப்பகுதிகள் முற்றாக சேதமடைந்திருந்தன. அவையே தற்போது திருத்தப்பட்டு வருகின்றன.

இதேசமயம் பாஷையூர்புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தின் கட்டடத்தின் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பமாகியுள்ளன.

(இ-17)

# நியமனக் கடிதம் பெறப் பணிப்பு

வலி:தென்மேற்கு, ஜூலை 28

பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்தும், நியமனக் கடிதங்களை பொறுப்பேற்காதவர்கள் இம்மாதம் 31 ஆம் திகதிக்குள் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அவற்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

நியமனக் கடிதங்களை பொறுப்பேற்காதவர்களின் விவரம் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-185-9)

# இன்றைய இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

இலங்கை இசைவேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறும்.

எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளரும், பத்திரிகையாளருமான செ. நடராசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இசை நிகழ்வுகளாக முருகானந்தம் - பிரேமானந்த் குழுவினரின் நாகசுர தவில் கச்சேரி, இசைஞானவாருதி எம். ஸ்ரீரங்க நாதனின் கர்நாடக இசைக் கச்சேரி ஆகியன இடம்பெற உள்ளன.

# கிழக்கில் புதிய அரசியல் குழு

அம்பாறை, ஜூலை 28

கிழக்கிலங்கையில் தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்து புதிய சுயேச்சைக் குழு ஒன்றை உருவாக்கி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழர் நலனில் தேசியக் கட்சிகளான ஐ. தே. க., சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகள் அக்கறை அற்று இருப்பதால் இக்கட்சிகளிலிருந்து வெளியேறிய தமிழர்களும், முஸ்லிம்களும் இணைந்தே சுயேச்சைக் குழுவை உருவாக்கியுள்ளனர்.

அக்கரைப்பற்றில் ஐ.தே.க. அதிருப்தியாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட சுயேச்சைக் குழு அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்கள் நலனைப் பேணும் வகையில் மாவட்டம் தோறும் கிளைகளை அமைக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-14-5)

# தேசிய இளைஞர் மன்றின் கலாசார வேலைத் திட்டம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் கலாசார வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

ஆக்க இலக்கிய பயிற்சிப் பட்டறை, கர்நாடக பண்ணிசைப் பயிற்சிப் பட்டறை, ஓவியக்கலை பயிற்சிப் பட்டறை என்ற தலைப்புகளில் இந்தக் கலாசார வேலைத் திட்டம் நடைபெறவுள்ளதாக தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் ரி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

ஒவ்வொரு பட்டறையும் நான்கு தினங்களில் நடத்தப்படவுள்ளதுடன் ஒவ்வொன்றிலும் 30 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

(இ-5)

## சைக்கிள் திருட்டு

வடமராட்சி, ஜூலை 28

மந்திகை சந்தைப் பகுதியில் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த ஒரு வாரத்தில் சந்தைக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

(இ-173)

# தெல்லிப்பழை முகாமுக்கு ரூ. 21 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 28

வெளிமாவட்டங்களில் இருந்து குடாநாடு திரும்பும் அகதிகளைத் தங்க வைப்பதற்காக தெல்லிப்பழையில் அமையவிருக்கும் முகாமுக்கான ஆரம்ப வேலைகளுக்காக 21 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியனவும் செய்யப்படவிருக்கின்றன.

குடாநாடு திரும்பும் அகதிகளின் நிலைகளை அறிந்து அவர்களுக்கான புனர் வாழ்வுப்பணிகளை மேற்கொள்ள சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் அங்குவந்து நேரடியாக விவரங்களைச் சேகரிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

(இ-3)

உ

## அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரன் திருக்கோயில் வருடாந்தத் திருவிழா

கொடியேற்றம்: 29 - 07 - 98 புதன்கிழமை காலை 9.00 மணி.

தேர்: 06 - 08 - 98 வியாழக்கிழமை காலை 9.00 மணி.

தீர்த்தம்: 07 - 08 - 98 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி

- தேவஸ்தானம்

அன்பளிப்பு:

புதிய சாந்தி அரைக்கும் ஆலை

வட்டுக்கோட்டை. (57828)

## 90-ம் நாள் நினைவஞ்சலி

(28 - 07 - 1998)



தோற்றம் 02 — 04 — 1912

மறைவு 28 — 04 — 1998

திருமதி அரசரட்ணம்அம்மாள் இராசசேகரம்

எமது பாடசாலை ஸ்தாபகரின் கடைசி மகனும், பாடசாலை வளர்ச்சிக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருபவருமான திருவாளர் இராசசேகரம் அவர்களின் அன்பு மனைவி அரசரட்ணம் அம்மாள் 28 - 04 – 1998 இல் கொழும்பில் காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யா/ தொண்டமானாறு,
வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்,
தொண்டமானாறு. (சி-4383)

## மண்ணில் இருந்து விண்ணிற்கு



மண்ணில் 18 — 04 — 1916

விண்ணில் 28 — 07 — 1983

அமரர்

### பொன்னையா கதிரவேலு

வருடாந்த மதச் சடங்குகள் லண்டனில் 17 — 8 — 98 இல் நடைபெறும்.

திருமதி P. கதிரவேலு

(57892)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## காரணம் யார்?

மன்னாரிலிருந்து தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஈழத்தமிழ் அகதிகள் சுமார் 44 பேர், படகு கவிழ்ந்ததால் கடலுக்குப் பலியான சோகச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது; கடற் கொந்தளிப்புக் காரணமாக படகிற்குள் தண்ணீர் புகுந்ததாலேயே இந்த மரணங்கள் நிகழ்ந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னரும் அகதிகள் பலர் கடலுக்குப் பலியான சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

ஈழத் தமிழர்கள், தாங்கள் பிறந்த சொந்த மண்ணில் வாழ்வதற்கு அஞ்சி தமிழகம் நோக்கி அகதிகளாகச் செல்லத் தொடங்கிப் பதினைந்து வருடங்கள் ஆகின்றன.

இவ்வாறு கடல் தாண்டிச் செல்வோரைத் தடுப்பதற்கு இலங்கை அரசு ஏதேதோ நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்திய அரசும் ஈழத்தமிழ் அகதிகள் தமிழகம் செல்வதைத் "தடை" செய்யப் பல இறுக்கமான செயற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

தமிழகத்தில் தஞ்சம் அடைவோருக்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட வசதிகளை, உதவிகளைக் குறைத்து, அங்குபோகாது மனவுறுதி இழக்கச் செய்யும் நடவடிக்கைகளும் இந்தியத் தரப்பில் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் தமது சொந்த மண்ணில் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும், அடிப்படைத் தேவைகளை இலகுவில் பெறமுடியாமலும் இன்னற்படுவதைவிட — தமிழகத்துக்குத் தப்பி ஓடுவது — படகு அதிகளாகச் சென்று — தஞ்சம் கோருவது, அங்கு அதிகளாக வாழ்வது பரவாயில்லை என்ற நிலையிலேயே ஈழத்தமிழர்கள் இப்போதும் கடல் தாண்டுகிறார்கள்

படகில் தாண்டுவது உயிராபத்தானது, விபத்துக்கள் அடிக்கடி நடைபெற்று தமிழகம் நோக்கிச் செல்வோர் உயிரிழக்கிறார்கள். என்று தெரிந்து கொண்டும் ஏனையோரும் படகு அகதிகளாக அக்கரையை அடையவே பெரிதும் விரும்புகிறார்கள் என்பது இதிலிருந்து புலனாகிறது.

எந்த மனிதனும், எவ்வளவு கஷ்டமாக இருப்பினும், தனது சொந்தக் கிராமத்தில், வீட்டில் வசிக்கவே விரும்புவான். அது இன்னல் நிறைந்த வாழ்க்கையாக அமைந்தாலும் சகித்துக் கொண்டு அங்கேயேவாழ முயற்சிப்பான்.

தனது உயிருக்கும் வாழ்வுக்கும் ஆபத்து என்ற தாங்க முடியாத நிலை வந்தாலே, விரக்தி நிலை உண்டானால் மட்டுமே வேறிடம் செல்லத் துணிவான்.

ஈழத்தமிழர்களில் ஒருசாரார் — குறிப்பாக வன்னிப் பகுதியில்வாழ்ந்து அவலமுறுவோர் — அகதிகளாகத் தமிழகம்செல்லவிரும்புகிறார்கள் என்றால்—

இலங்கை அரசு அவர்களது வாழ்வியக்கத்துக்கு உதவவில்லை என்றநிலை தொடர்கிறது என்பதே ஆகும்.

ஆகையால் படகு விபத்துக்கள் நடைபெற்று ஈழத் தமிழர்கள் இறப்பதற்கு அடிப்படையில் அரசாங்கமே காரணம்; பொறுப்பு என்றும் கூறலாம்.

# அருள் சுரக்கும் நல்லைப்பதியிலே உறையும்

# வேற்குமரனுக்கு இன்று கொடியேற்ற விழா

**சமூகஜோதி கா. கணேசதாசன்**

இன்று நல்லூர்க் கந்தனின் கொடி ஏற்றம் காணும் நன்னாள்.

கலியுக வெப்பத்தினின்று உயிர்களைக் காப்பாற்றிக் கருணை பொழிய வல்லவர் முருகப்பெருமானே — என்று வியாசர் ஏனைய முனிவர்களுக்கு மொழிந்திருக்கிறார்.

முருகு என்ற அடிப்பதமே உயிர்களைக் காப்பாற்றும் கருணையுடையவன் என்ற கருத்தை வழங்குகிறது. அந்த மூன்று எழுத்துக்களும் உகரமாகிய உயிரை அடக்கி இருப்பன. உகரம் காத்தற்றொழிலை விளக்குவது. எனவே முருகன் முக்காலமும் காப்பவன் என்ற கருத்தையே நாம் உணர முடிகிறது.

அவனுடைய வேல் ஞானத்தின் சின்னம். மயில்வாகனம் பிரணவ சொரூபம், திருமுகங்கள் ஞான அடக்கம் அவன் வேலைப் போற்றினார்கள் தேவர்கள்.

வேலை வணங்குவதே நமக்கு வேலை; வேலை வணங்காது வேறென்ன வேலை— என்றார் ஓர் அறிஞன். உண்மைதான். நல்லூரிலே மூலஸ்தானத்தில் வேல்தான் உண்டு. இதுவே கூர்ந்த பரந்த ஆழமான அறிவை உணர்த்தும் வேல், இதுவே நம் வினை தீர்க்க வல்லது.

இருபத்தைந்து திருவிழாத் தினங்களும் இந்திரலோகமெனக் காட்சி தரும் நல்லூரின் எல்லையில் கால் மிதித்தாலும் தீவினை தொலையும்.


அருள் சுரக்கும் ஆலயமாக விளங்கும் நல்லூர் ஆகம முறைப்படி அமைந்த திருத்தலமாகும். இங்கு வந்து வழிபடுவோரின் உள்ளங்கள் முருகனுறையும் ஆலயங்களாக விளங்கும்.

நல்லூரில் நின்று 'முருகா' என்று ஒரு முறை கூவியழைத்தாற் போதும். முருகன் அன்பர்க்கு அன்பனாகவும், அடியவர்க்கு எளியவனாகவும், கவிஞர்க்குப் புலவனாகவும் காட்சியளிப்பான் இதனாலேயே "நெஞ்சில் ஒரு கால் நினைக்கில் இருகாலும் தோன்றும், முருகா என்று ஓதுவார் முன்" என்று பாடியுள்ளார்கள்.

உற்சவம் என்பது மேலான செல்வம் எனவும் உத்தம யாகம் எனவும் பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பது எனவும் ஆகம விதிகள் கூறும். இதனை நடத்துபவர்களும் பார்ப்பவர்களும் நடத்துவிப்பவர்களும் புண்ணியவான்களே ஆகவே நல்லூரில் விழாக்காணும் அத்தனை பேரும் அரும் பெரும் புண்ணிய சீலர்களாவர்.

நல்லூர் முருகனுக்குக் கொடியேறிவிட்டால் ஊரெல்லாம் விழாக்கோலம் பூண்டு விடும் வீதியெங்கும் வெண் மணல் பரப்பி, தண்ணீர்ப் பந்தலிட்டுத் தொண்டர் சபையினர் சமயப்பணி செய்து வருகின்றார்கள், பக்தி வெள்ளம் கரைபுரண்டோட தெய்வீகமான முருகானுபவத்தில் அன்பர்கள் திளைக்கின்றார்கள்.

பஜனைக்கோஷ்டி ஒரு பக்கம், அங்கப் பிரதட்சணம் செய்வோர் ஒரு பக்கம் தூக்குக்காவடி, பாற்காவடி, கரகம் ஆடுவோர் ஒரு பக்கம் என்று எங்கும் தெய்வீககளை காணப்படும். நல்லூர்த் திருவிழாச் சிறப்பையும், கோயிலின் அழகையும் சிந்தனையில் நிறுத்துவது நம் உள்ளங்களைப் புனிதப் படுத்துவதோடு ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒட்டிக் கொண்டிருக்கும் வேற்றுமைகள், பொறாமை, சுயநலம், அகங்காரம் முதலிய மாசுகளைப் போக்கவும் வாய்ப்பாகும்.



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானால் நல்லூர் பெருமையடைந்தது. அதன் பின்பு யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையொன்று நல்லூர் முருகன் தேரடியில் உருவாகியதும் சிந்திக்கத் தக்கது. கடையிற்சுவாமியின் சீஷ்யன் செல்லப்பா சுவாமிகளாவார். இவர் எப்போதும் நல்லூர்த் தேரடியில் தவம் செய்வார். அங்குவருவோரை நாய், பேய், கரடி, புலி, சிங்கம், நரி என்று தான் அழைப்பார். தற்செயலாக யோகர் சுவாமி அங்கு வந்ததும் மனிதனென்றே அவரை அழைத்தார். காரணம் மக்கள் வடிவத்தில் மிருகக்குணம் கொண்டவர்களையே மிருகமாக அழைத்தவர், தவத்திரு யோகர் சுவாமியவர்களைக் கண்டதும் ஒரு மனிதனைக் கண்டதாலேயே ஆகும். தவயோக சுவாமிகள் செல்லப்பாசுவாமியின் சீடரானார்.

தாம் பெற்ற இன்பம் எல்லோரும் பெறவேண்டுமென எண்ணிய யோகர் சுவாமிகள் நல்லூர்முருகன்பெருமை மற்றும்நல்லூர் தேரடியின்பெருமைகளை வியந்து தனது நற்சிந்தனைப் பாடல்களில் பாடியுள்ளார்.

இம்மைப்பேறு மறுமைப்பேறு ஆகிய இரண்டிற்கும் முருகன் தேவை. உலகமுய்ய வேண்டி உதித்த பிரான் எமது அல்லல் அகற்றி அருள் புரிவான். நல்லைக் குமரனின் நற்றாள் வணங்கி நல்லருள் பெறுவோமாக.

★

## நல்லூரிலே சேரும் திருவருள்

எடுப்பு

ஆறு முகக்கந்தன் அடியார் தொழுதுநின்று
கூறும் வினைதீர்ப்பான் கும்பிட வாருங்கடீ
(ஆறு)

தொடுப்பு

ஏறும் கொடிபார்த்து எழிலன் அருள்வேண்ட
சேரும் நல்லூரிலே திருவருள் கூடுமடீ
(ஆறு)

முடிப்பு

முருகன் இருமாதர் முகூர்த்த மயிலேறி
வருவன் வேலேந்தி வரங்கள் தருவதற்கே
ஒருவன் அவனன்றி உதவ ஒருவரில்லை
கருமம் கைகூடக் கந்தனை வேண்டுங்கடீ
(ஆறு)

— முருகனடியான்

# சைக்கிள் திருட்டுக்கு. 6 மாத கடூழியச் சிறை

யாழ்ப்பாணம் ஜூலை 28

சைக்கிள் திருட்டுக் குற்றம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஒருவருக்கு ஆறுமாத கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 20 ஆம் திகதி மேற்படி நீதிமன்றத்தில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் சுன்னாகம் பொலிஸாரினால் இவர் ஆஜர் செய்யப்பட்டார்.

யோகராஜா மகிந்தன் என்ற இந்த நபரிடமிருந்து ஆறு சைக்கிள்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார்தெரிவித்தனர்.

ஏழு சைக்கிள்களைத் திருடியதாக நீதிவான் முன்னிலையில் அவர் ஒப்புக்கொண்டதையடுத்தே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.


(இ - 5)

## குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 28

அளவெட்டி சைவவாலிப சங்கம் ஏற்பாடு செய்துள்ள சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை எதிர் வரும்வெள்ளிக்கிழமைகாலை 10மணிக்கு அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் நடை பெறும்.

(இ-4)



## விழுந்து கும்பிட்டால் விலங்கம் வராது

எந்நாளும் நல்லூரை வலம் வந்து
வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.
அந்நாளில் ஆசான் அருந்தவம்
செய்த இடம்
அதுவாத லாலே அதிசயம்
மெத்த உண்டு.

வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன
வீதியால் வந்தொருக்கால் விழுந்து
கும்பிட்டால்
விலங்கம் எல்லாம் இல்லாமற் போமே.

— யோகர் சுவாமிகள்

### உதய வாக்கு

ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்து விடு; ஆனால் அந்த மனிதனை வெறுத்துவிடாதே.

ஷேக்ஸ்பியர்

## நாளை

ஆடி -13

புதன்கிழமை

திதி: ஷஷ்டி

பின்னிரவு: 1.45 வரை.

நட்சத்திரம்: அத்தம்

முன்னிரவு: 11.42 வரை

ஷஷ்டிவிரதம்

சுபநேரம்: 4.33 - 6.03

ராகுகாலம்: 12.30 1.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆயிரம் பேருக்கு பழமர நாற்றுக்கள்

## ஒக்ரோபர் முதல் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 28 பட்டினிக்கு எதிரான நிறுவனமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து நடத்தும் பழமரச் செய்கைத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பழமர நாற்றுக்கள் எதிர்வரும் ஒக்ரோபர் முதல் டிசம்பர் வரை வழங்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து 5 ஆயிரம் பயனாளிகள் இத் திட்டத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டம் தொடர்பான ஆரம்பப் பயிற்சி வகுப்புகள் தெரிவு செய்யப்பட்ட கிரம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்திற்கென ஆறு வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவார்கள்.

இத் திட்டம் தொடர்பான அறிமுகக் கலந்துரையாடலொன்று திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி செல்வி பிரான் கொய்ஸ் ஜேக்கப், திட்ட முகாமையாளர் செலாற்றன் செலாபிக் ஆகியோரும், யாழ். அரச அதிபர், விவசாயப் பணிப்பாளர்கள் ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (இ–5)

## வறிய மாணவர்களுக்கு பற்பசை, தூரிகைகள்

### நல்லூர் லயன்ஸ் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 28 நல்லூர் லயன்ஸ் கழகம் இந்த ஆண்டுக்கான பல்வேறு இலவச செயல்திட்டங்களின் தொடரில் திருநெல்வேலியில் இலவச பற் பரிசோதனையை நடத்தி பற்பசை, தூரிகைகளை வழங்கியது.

திருநெல்வேலி இந்து கலவன் பாடசாலையில் அதன் அதிபர் மகேசன் தலைமையில் நடந்த வைபவத்தில் இவை வழங்கப்பட்டன.

பற்களைப் பாதுகாக்கும் முறை, பல் துலக்கும் முறை, பல்லின் அவசியம் ஆகியன தொடர்பாக டாக்டர் எஸ். நடேசன், டாக்டர் பிரதீப் குமார் ஆகியோர் விளக்கமளித்தனர்.

அதன்பின் 200 வறிய மாணவர்களுக்கு பற்பசை மற்றும் தூரிகைகள் நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் பா. தவபாலனால் வழங்கப்பட்டன. (இ–3)

## மகனின் பிரிவால் நோய்வாய்ப்பட்ட தாயார் மரணம்

1996ஆம் ஆண்டு கைதான தனது மகனின் நிலை குறித்து தகவல் கிடைக்காததால் கவலை அடைந்திருந்த தாயார் ஒருவர் மரணமானதாக கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

நல்லூரடியைச் சேர்ந்த பொன்னம்பலம் கண்ணதாசன் என்ற இளைஞர் 1996ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார் என்றும்—

மகன் தொடர்பான தகவல் கிடைக்காததால் கவலையடைந்து நோய்வாய்ப்பட்ட நிலையில் அவரது தாயார் மரணமானார் என்றும் — அச்சங்கம் மேலும் தெரிவித்தது. (இ-3)

# கிளிநொச்சியில் கைதான அறுவர் யாழ். செயலகத்தில் ஒப்படைப்பு

### சொந்த இடம் அனுப்பப்படுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 28 கிளிநொச்சியில் படையினரால் கைது செய்யப்பட்ட ஆறுபேர் யாழ். செயலகத்தில் ஆனையிறவு இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

கண்டாவளையைச்சேர்ந்த ம. அல்பேர்ட் (48 வயது), க, ஆனந்தராசா (30 வயது), வை. ராஜகோபால் (37 வயது) ஆகியோர் கடந்த 13 ஆம் திகதியும் —

பொ. தர்மலிங்கம் (49 வயது), உருத்திரபுரம் பொ. இராமச்சந்திரன் (30 வயது) குஞ்சுப்பரந்தன், பொ. பூபாலபிள்ளை (28 வயது) குஞ்சுப்பரந்தன் ஆகியோர் கடந்த 16 ஆம் திகதியும் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சிப் பகுதியில் தேங்காய் பிடுங்கச் சென்றபோதே இவர்கள் அறுவரும் படையினரிடம் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு இராணுவ முகாமுக்கு கொண்டுவரப்பட்டு தீவிர விசாரணைகளின் பின் இவர்கள் யாழ் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது யாழ். செயலகத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் இவர்கள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து தமது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

இவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையும் யாழ். செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (இ–ரி–5)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஜூலை28 கைதடி மேற்கு கிராம சேவை உத்தியோகத்தராக கடமையாற்றிய ஜோசப் ரட்ணராஜா கோப்பாய்மத்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 1ஆம் திகதியிலிருந்து இவர் கோப்பாய்மத்தி கிராமசேவை உத்தியோகத்தராக பொறுப்பேற்கவுள்ளார். (இ–5)


அனலையம்பதி நயினாகுளம்

அருள்மிகு

**ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானம்**

**வருடாந்த**

**மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1998**

ஐயன் மெய்யடியார்களே,

ஐயனாரின் மஹோற்சவம்

**29 – 07 – 98** புதன்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகிப் பத்து நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 04-08-98 | செவ்வாய்க் கிழமை | வேட்டைத் திருவிழாவும் |
| 05-08-98 | புதன் கிழமை | இரவு சப்பரத் திருவிழாவும் |
| 06-08-98 | வியாழக்கிழமை | தேர்த் திருவிழாவும் |
| 07-08-98 | வெள்ளிக்கிழமை | தீர்த்தத் திருவிழாவும், மாலை துவஜா அவரோகணமும் |
| 08-08-98 | சனிக்கிழமை | மாலை பூரணை புட்கலை சமேத ஐயனாருக்குத் திருக்கல்யாணமும் நடைபெறும். |

மக்கள் நலன் கருதி அன்னதான சபையினரால் 11 நாள்களும் அன்னதானம் வழங்கப்படும்.

குறிப்பு:— வெளியூர் அடியார்களின் நலன்கருதி விழா நாள்களில் காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து அனலைதீவிற்கும், மாலை 3 மணிக்கு அனலைதீவிலிருந்து ஊர் காவற்றுறைக்கும் விசேட படகுச் சேவை நடைபெறும்.

யாழ். மக்களின் நலன் கருதி முதல் பேருந்து ஊர் காவற்றுறையை வந்தடைந்த பின்னர்தான் படகு புறப்படும்.

அனைவரும் வருக அருள் பெறுக!

சாமியே சரணம் ஐயப்பா!

(57908) — ஆலய பரிபாலன சபை



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கரவையூரைச் சேர்ந்த சங்கீத பூஷணம்

**திருமதி**

**அக்னெஸ் இராசம்மா மரியாம்பிள்ளை**

அவர்களை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாபூஷண விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்கு பாராட்டி மேலும் பல ஆண்டுகள் சீருஞ் சிறப்புடன் சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

கரவை பரலோக அன்னை ஆலய

பங்கு மக்களும்

நிர்வாகசபை அங்கத்தவர்களும்.

(சி/4406)



## யாழ். வர்த்தகர்களுக்கு பணிவான வேண்டுகோள்

யாழ். வர்த்தகர் சங்கம் சஞ்சீவி பத்திரிகையில் வெளியிட்ட விளம்பரத்தை சில வர்த்தகர்கள் மீறி நடக்கிறார்கள். இதனையிட்டு எமது சங்கம் மிகுந்த வேதனை அடைகிறது. யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து தனியார்துறை வர்த்தகர்களுக்கும் சனிக்கிழமைகளில் பி. ப. 2 மணியுடனும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாளும் மற்றும் அரசாங்க விடுமுறை நாள்களிலும் தங்கள் வர்த்தக நிலையங்களை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். மருந்தகங்களிலும், தொலைபேசி சேவைநிலையங்களிலும், தேநீர்ச்சாலைகளிலும் வேலை செய்யும் ஊழியர்களுக்கு வாரத்தில் ஒன்றரை நாள் விடுமுறை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது சங்கத்தில் அங்கத்தவராக சேராத ஊழியர்களும் எமது சங்கம் போராடி பெற்றுக் கொடுத்த உரிமைகளை அனுபவித்து வருவது குறித்து கவலை அடைகின்றோம். ஆகவே அவர்களையும் எமது சங்கத்தில் அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ள ஆவன செய்யுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்கள் ஆதரவிற்கு நன்றி!

நிர்வாகம்.

வர்த்தக ஊழியர் சங்கம்,

யாழ்ப்பாணம்.

(சி–4402)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இறையன்பர்

**குழந்தை வடிவேலு J.P.**

கொடையில் சிறந்த வள்ளலாம்
குழந்தை வடிவேலு
இன்சொல்லை தன்னகத்தே கொண்ட
இறையன்பரே
அன்பர்தம் சிந்தையில் உறையும்
உத்தமரே
சச்சிதானந்த அருட்குருவின் அடியவரான
அண்ணலே
அவரருளால் அவனியில் ஆனந்திக்கும்
அடியவரே
உன்னதமான உன் சேவையினால்
நீதிமானானாய்
தங்கள் சேவையில் தடைகள் இன்றித்
தழைத்திட வேண்டி
சீரும் சிறப்பும் பெற்று வையகத்தில்
வளமுடன் வாழ
வாலாம்பிகையின் அருள் தங்களை
ஆளவேண்டி
ஆன்மீகச் செம்மலை பாராட்டி
வாழ்த்துகிறோம்!

கைதடி வடக்கு

வாலாம்பிகை அம்பாள் தேவஸ்தானம்

அம்பிகை மகளிர் குழு.

(57906)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா, மன்னாரில் எரிபொருள்
# விநியோகத்தில் புதிய கட்டுப்பாடு

வவுனியா, ஜூலை 28

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் எரிபொருளை அனுமதிப்பத்திர அடிப்படையில விநியோகிக்கும் புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு கொண்டு வரப்படவிருக்கிறது.

அண்மையில் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு நடத்திய கூட்டம் ஒன்றில் பங்கு கொண்ட வவுனியா, மன்னார் அரச அதிபர்களுக்கு விடுக்கப்பட்ட அறிவுறுத்தலின் பேரில் இந்த நடைமுறை அமுலுக்கு வரவிருக்கிறது.

மன்னார், வவுனியாவில் இருந்து இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எரிபொருள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவல்களையடுத்தே புதிய நடைமுறை அமுல் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்படி இந்த மாவட்டங்களில் உள்ள எரிபொருள் நிலையங்களில் கொள்கலன்களில் எரிபொருள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது என்றும்—

அரச அதிபரின் அனுமதிப் பத்திரங்களைக்காட்டி வாகனங்களின் டாங்கிகளில் எரிபொருளை நிரப்ப வேண்டும் என்றும் — பணிக்கப்பட்டுள்ளது. (இ-164-3)

## தட்டெழுத்தாளர் சேவை:
# 15 பேருக்குக் கொழும்பில் நேர்முகப் பரீட்சை

நவாலி, ஜூலை 28

அரச திணைக்களங்களில் உள்ள தட்டெழுத்தாளர் சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு கடந்த 95 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பொதுப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி யாழ். மாவட்டத்தில் 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 8 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான கடிதங்கள் யாழ். செயலகத்தினால் நேற்று 27 ஆம் திகதி திங்கட்கிழமை அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-100)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 28

சூராவத்தை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 6 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-4)

★ ★ ★

அனலையம்பதி — நயினாகுளம் அருள்மிகு ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

இன்று மாலை பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகும். எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழன் தேர்த்திருவிழாவும் வெள்ளி தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று 8 ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருக்கல்யாண உற்சவம் இடம் பெறும்.

உற்சவகாலத்தில் தினமும் மேற்படி ஆலய அன்னதான சபையின் அன்னதானமும் இடம்பெறும் (இ-ரி)

★ ★ ★

அளவெட்டி வெளிவயல் ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து அருள் மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயவருடாந்த இலட்சார்ச்சனை சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12தினங்கள் நடைபெறும்.

தினமும் பிற்பகல் 3-00 மணிக்கு நவகலச அபிஷேகம், பூசை, விசேட சந்தி, நியாசம், ஹோமம், நவசக்தி அர்ச்சனை ஆகியன இடம்பெறும். (இ-30)

★ ★ ★

எழுதுமட்டுவாழ் விழுதுபனை கண்ணகை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 6 ஆம் திகதி இரதோற்சவம், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-3)

★ ★ ★

வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 7 ஆம் திகதி தீர்த்த உற்சவமும், திருவிளக்குப் பூசையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வருடாந்த பொங்கலும் இடம்பெறும்.

உற்சவகாலத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (இ-3)

★ ★ ★

கந்தரோடை கணக்கர் வளவு அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 10மணிக்கு விசேட அபிடேக ஆராதனைகளும், மாலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலாவும், ஓய்வுபெற்ற அதிபர் எஸ். சிவ சரவணபவனின் (சிற்பி) தொடர் சமயச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (இ-8)

★ ★ ★

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 108 கலசசங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவுபெறும். (இ-30)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

ஓகஸ்ட் 6 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-ரி)

★ ★ ★

மீசாலை வெள்ளைமாவடி திருநீலகண்ட பிள்ளையார் ஆலய மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

ஓகஸ்ட் ஆறாந் திகதி தேர் உற்சவமும் ஏழாந் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (இ-117)

★ ★ ★

இணுவில் காரைக்கால் சிவன்கோயிலின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறும் மஹோற்சவ காலத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ-4)

★ ★ ★

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும். ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும் பத்தாம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-15)

## கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்களின் படங்களையும் அது ஒளிபரப்பியது.

இந்த அனர்த்தத்தில் பலியானோரில் ஒருவரின் சடலம் மட்டுமே மீட்கப்பட்டிருப்பதாக இராமேஸ்வரத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

படகில் பயணம் செய்தோரின் பேயர் விவரங்கள் வருமாறு:-

த. சண்முகவடிவேல் (முள்ளியவளை), கா. செல்வராசா (மாங்குளம்), போ. கிருஷ்ணகுமார் (யோகபுரம்), போ. பிரகாஸ்குமார் (யோகபுரம்), வே. சச்சிதானந்தம் (கண்டாவளை), வே. காண்டீபன் (கண்டாவளை), ந. ஜானகி அம்மா (பொலிகண்டி), இ. பூரணலிங்கேஸ்வரி (அனந்த புளியங்குளம்), இ. சங்கீதன் (அனந்த புளியங்குளம்), இ. பங்கீர்த்தனா (அனந்த புளியங்குளம்).

தெ. நிதீபன் (மாங்குளம்), அ. செபமாலை (பலாலி வடக்கு), செ. லூர்த்தம்மா (பலாலி வடக்கு), செ. டெல்சியான் புஸ்பராணி (பலாலி வடக்கு), செ. பிலிப் யேசுரட்ணம் (பலாலி வடக்கு), பா. றமணியம்மாள் (அக்கராயன்குளம்), பா. லவன்மீனா (அக்கராயன்குளம்), க. கதிர்காமத்தம்பி (கரவெட்டி), ந. புஸ்பராசா (கிளிநொச்சி).

பு. சிவபாதசுந்தரம் (அல்வாய் வடக்கு), பொ. ராஜேஸ்வரி (சுன்னாகம்), பொ. விஜயகுமார் (சுன்னாகம்), க. கந்தசாமி (சுன்னாகம்), க. நாகேஸ்வரி (சுன்னாகம்), க. அற்புதராசா (சுன்னாகம்), க. ஆனந்தராணி, மு. ஜெயதீபனி (இராமநாதபுரம்), வே. சரஸ்வதி (திருவள்ளுவர் நகர்), வே. விஜயசாந்தினி (யோகபுரம்).

அ. சுவாமிநாதஐயர் (உரும்பிராய்), து. அன்ரனி பாஸ்கரன் (மன்னார்), து. மதிஸ்ரில்லா (மன்னார்), து. ஞானேஸ்வரி (மானிப்பாய்), து. சதீஸ்குமார் (மானிப்பாய்) ச. மோகனராஜா (மாங்குளம்), ந. நனாஜினி (இணுவில்), ந. செனட்டர் (இணுவில்), த. பரமேஸ்வரி (வல்வெட்டித்துறை), த. மகேஸ்வரன் (கோம்பாவில்)

த. பிறிடேவிற் சந்திரன் (கோம்பாவில்), த. தங்கேஸ்வரி (கோம்பாவில்), ச. புனிதராணி (மாதகல்), ச. ஜெனா (புதுக்குடியிருப்பு), தா. வேலாயுதம் (மன்னார்), வே. தயாநிதி (மன்னார்), வே. பானுமதி (மன்னார்), கி. மரியதாஸ் [illegible], க. லட்சுமணதாஸ் (மாதகல்) (ஐ)

## ஆலயத்துக்கு வருவோர்
# தங்கநகை அணிவதை தவிர்க்க வேண்டுகோள்

நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்கள் தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம் முறை திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே சன நெருக்கடியைப் பயன்படுத்தித் திருடர்கள் தங்கள் கைவரிசையைக்காட்ட சந்தர்ப்பம் உண்டு.

எனவே திருட்டுக்களுக்கு வாய்ப்பான சூழ் நிலையைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு நகைகள் அணிந்து வருவதனைத் தவிர்ப்பது நல்லது என்று யாழ். மாநகரசபை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# படகு கவிழ்ந்த சம்பவம்: ஈ. பி. டி. பி. அனுதாபம்

யாழ்ப்பாணம் ஜூலை 28

இராமேஸ்வரம் கடலில் படகு கவிழ்ந்து 44 க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் உயிரிழந்த சம்பவத்துக்கு அனுதாபம் தெரிவித்து ஈ.பி.டி.பி. அமைப்பு அறிக்கை ஒன்றைவிடுத்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வன்னியில் இருந்து தமிழகம் சென்ற தமிழ் அகதிகள் 40 க்கும் மேற்பட்டோர் நடுக்கடலில் பலியாகியுள்ளனர். இந்தத் துயரத்துக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

இன்றைய யுத்தத்தின் தாக்கங்களே வடக்கு-கிழக்கில் மக்களின் உயிர் வாழ்வதற்கு உத்தரவாதம் இல்லாமற்செய்துள்ளன.

வன்னிக்கு உணவுப்பொருள்கள் தாராளமாக அனுப்பிவைக்கப்படுவதாக கூறப்பட்டு வருகிறது. ஆனால், அக்கூற்றுக்களுக்கு மாறாகவே அங்குள்ள நிலைவரங்கள் இருக்கின்றன. இந்நிலையில் நிவாரண வெட்டும் அம்மக்களை பட்டினிச்சாவுக்கு இரையாக்கப் போகின்றது என்று அஞ்ச வேண்டியுள்ளது.

இதேவேளை:-

விமானக்குண்டுவீச்சு, ஷெல் வீச்சு போன்றவற்றாலும் பல்லாயிரக்கணக்கான வன்னிமக்கள் இடம்பெயர்ந்து வானமே கூரையாக வாழ்ந்து வருகின்றார்கள். மேலும் தொடரும் யுத்த நடவடிக்கைகள் இடம்பெயர்ந்த மக்களைத் தொடர்ந்தும் நரக வாழ்க்கைக்கு தள்ளுவதுடன் மேலும் மேலும் இடம் பெயர்வுகளை உருவாக்கி வருகின்றன.

இவ்வாறான துயரச் சூழலில் இருந்து தப்பிக்கொள்ளவே தமிழர்கள் சிலர் தமிழகம் நோக்கித் தப்பிச் செல்லுகின்றனர்.

யாழ். குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தும், ஆயிரக்கணக்கானோர் தமிழகம் நோக்கி புகலிடம் தேடிஓடுவது, அரசின் மீதும் அதன்பாதுகாத்தலிலும் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டதன் பிரதிபலிப்பேயாகும்.

யுத்தத்தைத் தொடர்ந்தபடி அதற்குசர்வதேசசமூகத்திடமும், உள்நாட்டிலும் அரசு விளக்கம் கூறுவதைவிட்டு சர்வதேச சமூக மத்தியஸ்தத்துடன் அரசியல் தீர்வுக்கான உண்மையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு மாறான யுத்த நாட்டம் அவலங்களைத் தொடர்கதையாக்கும்.

சொந்த மண்ணில் அகதியாகி அயலக மண்ணில் புகலிடம் தேடி ஓடியபோது பலியான மக்களுக்கு ஈ.பி.டி.பி தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மீனவர்கள் கடத்தல்

திருமலை கட்டைப்பறிச்சான் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் 42 முஸ்லிம் மீனவர்கள் அவர்களது 21 படகுகளுடன் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (ஐ-9)

## கோழிக்குஞ்சு விநியோகம் இன்று இல்லை

கால்நடை வைத்திய அலுவலகங்களின் மூலம் இன்று விநியோகிக்கப்பட இருந்த ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் தவிர்க்க முடியாத காரணங்களால் வழங்கப்பட மாட்டாது என கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## சாவகச்சேரி பிரதேச சபை:
# 2 உறுப்பினருடன் நடந்த மாதாந்தக் கூட்டம்!

தென்மராட்சி, ஜூலை 28

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த வெள்ளியன்று இரு உறுப்பினர்களுடன் மட்டுமே நடைபெற்றது. 15 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இந்தச் சபையில் இருவர் மாத்திரமே கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தனர்.

புளொட் சார்பில் 7 பேரும், ஈ.பி.டி.பி சார்பில் 4 பேரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் மூவரும், ரெலோ சார்பில் ஓர் உறுப்பினரும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் தவிர்ந்த ஏனையோர் பதவியேற்கவில்லை. சபையை நடத்த ஒத்துழைப்பு வழங்கி வந்த புளொட் உறுப்பினர்களில் 6 பேரும், ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் இருவரும் பின்னர் ராஜினாமா செய்தனர்.

அதன் பிறகு பதவியேற்காமல் இருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் நால்வரும் பதவிப்பிரமாணஞ் செய்து கொண்டதை அடுத்து ஆறு உறுப்பினர்களுடன் மட்டுமே சபை இயங்கி வந்தது. ஆனால்கடந்த வெள்ளியன்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் புளொட் உறுப்பினர் அன்ரன் பொன்னையாவும், ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் வயிரமுத்து விக்கினேஸ்வரனும் மட்டுமே கலந்து கொண்டனர்.

பிரதேச சபைகள் சட்டத்தின்படி இரண்டு உறுப்பினர்கள் சமுகமளித்திருப்பின் கூட்டத்தைக் கூட்ட முடியும்.

அன்றைய கூட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் தொடர்பான சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக பிரதேச சபை தவிசாளர் அன்ரன் பொன்னையா தெரிவித்துள்ளார். (ஐ-11 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பமாகும் இந்த உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் இன்று ஆலயத்தில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் வரும் பஸ்கள் இன்று முதல் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள குறுக்கு வீதி வழியாகச் சென்று நாவலர் வீதி, கஸ்தூரியார் வீதி வழியாக யாழ். நகரைச் சென்றடையும் என்றும் —

பக்தர்களின் வசதி கருதி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் எஸ். சொக்கலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-9)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆறு பேர் கொண்ட ஆறு ஓவர் கிரிக்கெட் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதும் அணிகள்வருமாறு:-

★ மானிப்பாய் பரிஷ் எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி.

★ சென்றலைட்ஸ் நீல அணி எதிர் யங்ஸ்ரார் அணி. (ஐ)


எமது புதிய வெளியீடு!

மம்முட்டியின்

உண்மை

அடுத்த வெளியீடு!

சந்திப்போமா

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம்.

(சி/4406)


## தீவிர...

(முதலாம் பக்கத் தொடர்)

தீவிர கண்காணிப்பில் இருந்து வருகின்றன.

6 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலீஸாரும் முப்படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் மும்முரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மோப்ப நாய்கள் சகிதம் பொலீஸார் நகரின் மூலை முடுக்கெங்கும் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

கொழும்பில் முக்கிய வீதிகளிலும், மாத்தறை வரையான கண்டி வீதியிலும், வீதியோரமாக வாகனங்களை நிறுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

'சார்க்' அமைப்பில் அங்கம் வகிக்கும் இந்தியா, பாகிஸ்தான், பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம் ஆகிய ஆறு நாடுகளின் தலைவர்களும் இன்று செவ்வாய்க்கிழமைகொழும்பு வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நீர் கொழும்பில் இருந்து கொழும்பு மற்றும் கொழும்பில் இருந்து பெந்தொட்ட வரையில் பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டிருக்கிறது.

தலைவர்களின் பாதுகாப்பு மற்றும் வீதிஒழுங்கு தொடர்பான ஒத்திகைகள் நேற்றும் பல இடங்களில் நடைபெற்றன. இதனால் மக்களின் வழமையான போக்குவரந்து பாதிக்கப்பட்டது.

பண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு மாநாடு ஆரம்பமாகும்.

'சார்க்' அமைப்பின் தற்போதைய தலைவரான மாலைதீவு அதிபர் அப்துல் கையூம் தலைமைப் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிப்பார். அதன் பின்னர் மாநாடு ஆரம்பமாகும்.

'சார்க்' உச்சிமாநாட்டுக்கு முந்திய வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட மாநாடு நேற்று நடைபெற்றது.

அணு சோதனைகளை நடத்திய பின்னர் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப்பும் இந்த மாநாட்டில் முதல் முறையாக சந்திக்கவுள்ளனர்

# கைது, காணாமற்போதல் வவுனியாவிலும் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 28

வவுனியாவில் கைது செய்யப்படுவோர், காணாமல் போவோர் தொடர்பாக தினமும் 15 முறைப்பாடுகளாவது பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய செயலகத்திலேயே இந்த முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுகின்றன.

தமிழர்கள் மட்டுமன்றிச் சிங்களவர் மத்தியிலிருந்தும் இவ்வாறான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அண்மையில் யாழ்ப்பாணம் வந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

வவுனியாவோடு ஒப்பிடும் போது யாழ்ப்பாணத்து நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் தமது செயலகத்துக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளைத் தொடர்ந்து கைது செய்யப்படுவோர் தொடர்பான விவரங்களைச் சம்பந்தப்பட்ட பொலீஸ் நிலையங்களுடன் அல்லது இராணுவ முகாம்களுடன் தொடர்பு கொண்டு அல்லது நேரில் சென்று உடன் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஐ-5)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்)

காணாமற் போன இருவரும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்கள் பாஷையூருக்கும் குருநகர் இறங்குதுறைக்கும் இடையேயுள்ள ஆழமான கடற்பகுதியில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மீட்கப்பட்ட சடலம் கடல் நீரில் ஊதிப் பருத்து, சிதைந்து துர்நாற்றம் வீசும் நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு அடையாளம் காணப்படுவதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(உ-6-139-15-5-15)

# 2 தமிழ் இளைஞர்கள் கடவத்தவில் கைது!

கொழும்பு, ஜூலை 28

கொழும்பு கடவத்தவில் வைத்து விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்கள் நேற்று பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடவத்த 'மொபிரெல்' தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துக்கருகில் சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடியபோது இவர்கள் கைது செய்யயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களிடம் அரை கிலோ கிராம் நிறையுடைய குறித்த நேரத்தில் வெடிக்கவைக்கும் குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

பிளாஸ்ரிக் உணவுப் பெட்டி ஒன்றினுள் சில மீன் துண்டுகளுடன் இந்தக் குண்டை மறைத்து வைத்திருந்தனர் என்றும் —

கைதான இருவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் எனவும் —

பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-9-21)

# தொலைபேசி பெற 4,500 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மாவட்டத்தில் தொலைபேசி இணைப்பு பெறுவதற்கு 4 ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் ரெலிக்கொம் நிறுவனத்துக்கு நேற்றுவரை வந்து சேர்ந்துள்ளன என்று ரெலிக்கொம் பிரதேச முகாமையாளர் த. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதுவரை வடமராட்சி இணைப்பகம் மூலம் 37 தொலைபேசி இணைப்புகளும், மோட்டா ரோலா மூலம் 54 இணைப்புகளும், யாழ். இணைப்பு மூலம் 410 இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளன.

மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் தொலைத் தொடர்பு கோபுரங்களை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. ஆறு மாதத்திற்குள் இவ்வேலைகள் நிறைவேற்றப்படும்.

பிரான்ஸ் அல்கா ரெல் நிறுவனத்திடம் தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைப்பதற்கான வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்புகோபுர வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான உபகரணங்கள் கப்பல் மூலம் இங்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-ரி-5)

## மட்டக்களப்பிலும் கறுப்புப்பட்டி தினம்

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு மாவட்டத்திலும் நேற்று கறுப்பு பட்டி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

1983 கறுப்பு ஜூலையில் இடம்பெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகள் படுகொலைச் சம்பவத்தின் நினைவாகவே மேற்படி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

ரெலோ, புளொட், ஈ.பி. ஆர். எல். எவ். என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

**யாழ். வண்ணை கன்னாதிட்டி**

**அருள்மிகு**

**காளியம்மாள் தேவஸ்தானம்**

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 29 - 07 - 98 | புதன்கிழமை |
| சப்பரத் திருவிழா: | 05 - 08 - 98 | புதன்கிழமை |
| தேர்த்திருவிழா: | 06 - 08 - 98 | வியாழக்கிழமை |
| தீர்த்தோற்சவம்: | 07 - 08 - 98 | வெள்ளிக்கிழமை |
| பூங்காவனம்: | 08 - 08 - 98 | சனிக்கிழமை |

அனைவரும் திரண்டு வருக! அம்பிகை அருள் பெறுக!

ஷை தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்

விளம்பர அனுசரணை:

தங்க நகைகளை நவீன டிசைனில் வெட்டிப் பெற்றுக் கொள்ள



GOLD CUTTING CENTRE

**சுவிஸ்ஸோ கோல்ட் கட்டிங் செண்ரர்**

44/1, யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

[ 57844 ]



## சித்திவிநாயகர் (ஐயண்ணார்) கோயில்

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேல் முறையீட்டு நீதிமன்றம் இல. 479/84 (எவ்) வழக்கின் 03-02-94 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பில், வழக்கைச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து, சுப்பையா இராசநாயகம் ஏக பரம்பரைத் தர்மகர்த்தா (SOLE HEREDITARY TRUSIEE) என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உறுதி இல. 220/1989 1ஆம் திகதி கார்த்திகை மாதம் 1993 ஆம் ஆண்டு .பி நொத்தாரிசு அருணாசலம் முத்துக்கிருஷ்ணன், திருநெல்வேலி முகதாவில் எழுதப்பட்ட உறுதியின்படி, சுப்பையா இராசநாயகத்தால், சுப்பையா சற்குணம், சுப்பையா குமாரசுவாமி ஆகிய இருவரும் கொக்குவில் மேற்கு, சித்திவிநாயகர் (ஐயண்ணார்) கோயிலின் முகாமையாளர்களாக (MANAGERS) நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி கோயிலினதும் அதன் சகல அசைவுள்ள — அசைவற்ற ஆதனங்களையும், உடமை கொள்ளவும் நிர்வகிக்கவும், கோயிலின் நாளாந்த நிர்வாகத்தை நடத்தவும் தேவையெனின் தமது விருப்பப்படி தமது இரத்த உறவினரிடையேயிருந்து தமக்குப் பதிலாளர்களைத் தெரிவு செய்யவும் மற்றும் சகல சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் குறித்த 220/1989 உறுதிமூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வெளியிடுபவர்;
சு. சற்குணம்

கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

மேற்படி மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குத் தீர்ப்பையும் (அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி) 220/1989 ஆம் இலக்க உறுதியையும் திரு. சு. சற்குணம் தரப் பார்வையிட்டேன். மேலே கண்டிருப்பவை அவற்றின் சரியான சுருக்கமான பொழிப்பு.

கோடீஸ்வரன்
சட்டத்தரணி.
27-07-1998.

(57910)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org